உ

சிவமயம்

# தண்டலையார்சதகம்,

என்கின்ற

# பழமொழிவிளக்கம்.

தண்டலைச்சேரி

சாந்தலிங்கக்கவிராயர்களால்

இயற்றியது.

இஃது,

திருத்தணி

செங்கல்வராயசுவாகளால்

பார்வையிடப்பட்டு

தக்கோலம்,

ராமசாமிநாயுடு அவர்களது

ஸ்ரீலட்சுமிநாராயணவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது

1891

உ

கடவுள் துணை.

தண்டலையார் சதகம் என்கின்ற

# பழமொழிவிளக்கம்.

## காப்பு.

சீர்கொண்டகற்பகத்தின் வாதாவிநாயகனைத்தில்லைவாழும், கார்
கொண்டகரிமுகனை விகடசக்கரக்கணபதியைக் கருத்துள்வைப்பாம்,
பேர்கொண்ட ஞானநாயகிபாகனீணெறியெம்பெருமான்மீதில்,எர்கொ
ண்டநவகண்டமிலைசந்தபழமொழி விளக்கமியம்பத்தானே க

வேதநெறிவியம்பியசொல்லாகமநூல் விளம்பியசொல் மிகுபுரா
ணம்,எதுவினிர்காட்டிய சொல்லிலக்கணச்சொல் லிசைந்தபொருளெ
ல்லாநாடி, ஆதிமுதலுலகுதனில் விளங்குபழமொழிவிளக்கமறிந்துபா
டச், சோதிபெருமதவேழமுகத்தொருவ னகத்தெனக்குத் துணைசெய்
வானே உ

## அவையடக்கம்.

வள்ளுவர்நூலாதிபல நூலிலுள வரும்பொருளை வண்மையாக, உ
ள்ளபடிதெளிந்துணர்ந்த பெரியவர்கண்முன்னு மொருவன்போல'ப
ள்ளமுது நீருலகிற்பரவுபழமொழிவிளக்கம் பரிந்துகூறல், வெள்ளமதி
யினன் கொல்லத்தெருவதனிலூசிவிற்கும்வினையதாமே ௩

## நூல்.

வரமளிக்குந்தண்டலையார்திருக்கோயிலுட்புகுந்து வலமாய்வந்து,
ஒருவிளக்காகிலும் பசுவினெய்யுடன்றுமனை நூலிலொளிரவைத்தால்,
கருவிளக்கும்பிறப்புமில்லை யிறப்புமில்லைகைலாசங்காணியாகும், திரு
விளக்கிட்டார்தம்மைத் தெய்வமறிந்திடும் வினையுந்திருந்தானே க

கூன்செய்தபிறையணியுந் தண்டலையார்வளநாட்டிற்கோடிகோடி,
யான்செய்தவினையகற்றி நன்மைசெய்தார்க்குபசாரமென்னுலுண்டோ
ஊன்செய்தவுயிர்வளரத் தவந்தான்நடந்தேறருத்வியாக, வான்செய்தந
ன்றிக்கு வையகமென்செய்யுமதை மதித்திடீரோ உ

அட்ட திசையெங்கனும்போயலைந்தாலும் பாதாளமதிற்சென்று
லும் பட்டமெனவரநாடுபறந்தாலு மென்னவதிற்பயனுண்டாமோ, பி
ட்டுவாமண்சுமந்ததண்டலைநீணெறியாரே பெரியோர்கையில்' இட்டப
டியேயொருவர் பேராசைப்பட்டில்வருவதில்லைதானே ௩

தன்மமதேசெயவேணுந் தண்டலைநீணெறியாரே தயவுசெய்வார், வன்மைவினைசெயவேண்டாம் பொய்வேண்டாம் பிறரையொன்றும் வருத்தவேண்டாம், தன்மநெறியறவேண்டாம் வேண்டுவதுபிறர்க்குபகாரங்கள்செய்தல், நன்மைசெய்வார்நலம்பெருவார் துன்மைசெய்வார் தீமையுறறு நலிவர்தாமே ௪

சங்கையறப்படித்தாலுங்கேட்டாலும் பிறர்க்குறுதிகளைச்சொன்னாலும், அங்கணுலகினிற்சிறியோர்தா மடங்கிநடந்துகதியடையமாட்டார், திங்களணிசடையாரே தண்டலையாரேசொன்னேன்சிறிதுகாலம் கங்கையிலே படிந்தாலும்பேய்ச்சுரக்காய் நல்லசுரக்காயாகாதே ௫

வாங்காலமுண்டசெழுந் தண்டலையாரடிபணிந்து மகிழ்ந்தெந்நாளும், போங்காலம்வருமுன்னே புண்ணியஞ்செய்தரியகதிபொருந்தாமல், ஆங்காலமானதெல்லாம் விசாரிபாடியறிவழிந்துவீணே, சாங்காலஞ் சங்கரா சங்கரா வென்னில்தருமோ வருவந்தானே ௬

வடியிட்டபுல்லர்தமை யடுத்தாலும்வருவதுண்டோமலிநீர்க்கங்கை முடியிட்டதண்டலைநாதனைப்புகழிற் பெருவாழ்வுமுத்தியுண்டாம், மிடியிட்டவினைதீருந் தெய்வமிட்டும்விடியாதவீடுவீணர், பாடியிட்டுவிடிவதுண்டோ வவனருளே தஞ்சமெனப்பற்றுமே ௭

அள்ளித்தண்ணீரணியுந் தண்டலையார் வளநாட்டிலாண்மையுள்ளோர், விள்ளுற்றகல்வியுள்ளோர் செல்வமுள்ளோரழகுடையோர்மேன்மைநோக்கி, யுள்ளத்திலழன்றுழன்று நமக்கில்லையெனவுரைப்போர்க்குவமைகூறில். பிள்ளைபெற்றவளைப்பார்த்து மலடிபெருமூச்செறியும் பெற்றியாமே. ௮

செங்காவிமலர்த்தடஞ்சூழ் தண்டலையா ரருங்கருணைசிறிதுண்டானால், எங்காகிலென்னவவரெண்ணிய வெல்லாமுடியுமில்லையாகில்,பொங்காழிசூழுலகிலுள்ளங்கால்வெள்ளெலும்பாய்ப்பொலியவோடி' ஐங்காதம்போனாலுந்தன்பாவந்தன்னுடனேயாகுந்தானே ௯

வர்க்கத்தார் தமைவெறுத்து விரத்தியராமெய்ஞ்ஞான வடிவத்தாயோர், கற்கட்டாகியமடமுங்காணியுஞ்செம்பொன்றேடுங் கருமமெல்லாம், பொற்கொத்தாநெல்வயல்சூழ்தண்டலைநீ ணெறியாரேபொன்னாடாகும், சொற்கத்தேபோகையிலுங் கடகத்தேராட்டினத்தைச் சுமந்தவாரோ ௰

காதியேகுண்டலங்கள் கையிலேசெபமாலை கழுத்தின்,மீதிலேதாழ்வடங்கள் மனதிலேகாவடமாவேடம்பூண்டோன்,,வாதிலேயயன்றேடுந் தண்டலைநீணெறியாரேமனிதர்காணும், போதிலேமௌனிபிராப் போதிலே ருத்திராட்சபூசைதானே ௰௧

சிறியவராமுழுமூடர் துரைத்தனமாயுலகாளத் திறம்பெற்றாலும், அறிவுடையார் தங்களைப்போலன்புடையார் புகழுடையாராகமாட்டார், மறிதருமான்மழுவேந்துந்தண்டலைநீணெறியாரேவாரிவாரிக், குறுணிமை யிட்டாலுங்குருடிகண்ணற்கண்ணாகிக்குணங்கொடாதே

பொற்குடையும்பொற்கிலும் பொற்பணியுங் கொடுப்பதென்ன பொருளோவென்று, நற்கமலமுகமலர்ந்தேயுபகாரமிக்கவின்சொனட்டதனன்றாம், கற்கரையுமொரும்பாகர்தண்டலையார்வளநாட்டிற்கரும்பினையந்த, சர்க்கரையின்பந்தலிலேதேன்மாரிபெய்ந்துவிடு தன்மைதானே ௰௩

திருவிருக்குந்தண்டலையார்வளநாட்டில்வாழ்க்கைமிகச்செலுத்து நல்லோர்க்கொருவிருந்தாகிலுமின்றியுண்டபகல்பகலாமோவுறவாய்வந்த,பெருவிருந்துக்குபகாரஞ்செய்தனுப்பியின்னமெங்கேபெரியோரென்று, வருவிருந்தேடுண்பதல்லால்விருந்தில்லாதுணுஞ்சோறு மருந்துதானே ௰௪

ஓதரியதண்டலையாரடிபணிந்து நல்லவனென்றுலகமெல்லாம்,பேதமிகப்பெயருடனே புகழ்படைத்துவாழ்பவனேபுருடனல்லால், ஈதலுடனிரக்கமின்றிப்பொன் காத்தபூதமென்னவிருந்தாலென்ன, காதவழிபேரில்லான்கழுதையோ டொப்பெனக்கழறலாமே ௰௫

புனங்காட்டுமெண்ணும் விண்ணுமஞ்ச வருங்காலனையும் போடாவென்று, இனங்காட்டுமோர்க்கண்டன் கடிந்தபதினாறு வயதென்றும்பெற்றான், அனங்காட்டுந் தண்டலையாரடியரல்லா மொருவருக்குமஞ்சுவாரோ,பனங்காட்டுநரிதானுஞ்சலசலப்புக்கொருநாளும்பயப்படாதே

குறும்பெண்ணுதுயர்ந்த நல்லோராயிரந்தான் சொன்னாலுங்குறிகொள்ளாமல், வெறும்பெண்ணுச்செயிலுழல்வார்மெய்ஞ்ஞானம்பொருந்தியுனைவேண்டாரந்தோ, உறும்பெண்ணோர் மொழிபிலஞ்சேர்தண்டலைநீணெறியாரேயுண்மைதேறில், எறும்பெண்ணுயிரம்பால்கழுதையுங்கைகடந்த தெனுமெண்ணந்தானே ௰௭

அல்லமருங்குழலாளை வரகுணபாண்டியராஜன்பாலீய்ந்தான், கல்லைதனில்மென்றுமிழ்ந்த வூனமுதைக்கண்ணப்பன்கனிவிலீய்ந்தான், சொல்லியதண்டலையார்க்குக்கிளையுமாவடுவுமொருகொண்ட னீய்ந்தான்நல்லதுகண்டானமதுநாயகனுக்கென்பர்கெதிநண்ணுவாரே ௰௮

அந்தணரைநல்லவரை பரமசிவனடியவரையகந்தையாலே, நிந்தனைசொன்னாலுமென்ன வைதாலுமென்னவதினிஷ்டமுண்டோ, சுந்தரர்க்குத்தூதுசென்றதண்டலைநீணெறியாரேதுலங்கும்பூர்ணச்சந்திரனைப்பார்த்து நின்றுநாய்குலைத்தபோதிலென்ன தாழ்ச்சிதானே ௰௯

சின்னமெங்கே கொம்பெங்கே சிவிகையெங்கேபரியெங்கே சிவியாரெங்கே, பின்னையொருபலனுமில்லைவாழ்வு குலைந்தாலுடனேபேபேயென்றே, சொன்னவிலுந்தண்டலையார்வளநாட்டிற்சாம்பிராணிதூபங்காட்டுஞ்சன்னதமானதுகலைந்தாற்கும்பிடெங்கேவம்பரிதுதனைபெண்ணோ ௨௰

தண்ணமருமலர்ச்சோலைத்தண்டலைநீணெறியார்மேற் றமிழைப்பாடில், எண்ணில்மிகவிம்மையினுமறுமையினும்வேண்டியதுண்டிதை நயோராமல்' மண்ணின்மிசைநாஸ்துதிகள்பண்ணியலைந்தேதிரிவார் வருத்தமின்றி' வெண்ணெய்தமதிடத்திருக்கநெய்தேடிக் கொண்டலையும்வீணர்தாமே ௨௧

மேட்டுக்கேவிரைத்தவிரை வீணருக்கேசெய்தநன்றிமேடம்பட்டி மாட்டுக்கேகொடுத்தவிலைபாத்தையர்க்கேதேடியிட்டவண்மையெல்லாம், பாட்டுக்கோருள்புரியுந்தண்டலையார் வளநாட்டிற்பரிந்திடாதத்,தாட்டுக்கேயெறித்தநிலாதகானலுக்கேபெய்த மழைகடுக்குந்தானே

போனகவிராசருடன் சிறியகவிஞருமேட்ராந்தஞ்செய்வார், வீராதி வீரருடன்கோழைகளும்வாள்பிடித்துவிருதுசொல்வார், பாராளுந தண்டலைநீணெறியாரே யிருவரையும்பகுந்துபார்த்தே, யாராயிற்றேவரடியாருடனே பேய்களுநின்றாடும்வாறே ௨௩

வம்பரொல்லாமதிக்க மிகுந்திருந்தாலென்னவதுமாறியோய்ந்த, பம்பரமாய்முலையினிற் கிடந்திட்டாலென்னவதிற் பலனுண்டாமோ, சம்புலவுந்தண்டலையார்வளநாட்டில் வருந்துபலகழுதைகாதமும், அம்புவியிற்கிடந்தென்ன பாதாளந்தனிற்கிடந்தென்னருகுந்தானே ௨௪

புல்லறிவுக்கெட்டாததண்டலையார் பொன்னிவளம் பொருந்துநாட்டில், சொல்லருமாதவம்புரிக் கசவுபரியந்துறவறதனைத்துறந்துமீண்டான், நல்லறமாம்வள்ளுவர்போல் குடிவாழ்க்கைப் பத்தியுடனடத்தினின்றால், இல்லறமேபெரிதாகுந்துறவறமேசிறிதென்னவியம்பலாமே.

பொலியவளம்பலதழைத்ததண்டலையார் திருப்பாதம்போற்றி நாளும், வலியவறஞ்செய்தறியீர்மறஞ்செய்வீர் நமன்றூதர்வந்துகூடமெலியவரித்திடும்போதுகலக்கண்ணீருகுத்தாலும் விடுவதுண்டோ, எலியழுதுபுலம்பிடினும் பூனைபிடித்ததுவிடுமோவியம்புவீரே ௨௬

கறுத்தவிடமுண்டருளுந் தண்டலையார் வளநாட்டிற்கடியதீயோர் குறித்த மனையாட்டனையுந்துகிலுரிந்துமைவரன்றுகோபித்தாரோ' பறித்தரிய பொருண்முழுதுங்கவர்ந்தாலும்மடிந்தாலும் பழிசெய்தாலும்பொறுத்தவரோயரசாள்வர் பொங்கினவர்தா நிறைந்துபோவர்தாமே ௨௭

தண்டலையாரடிபணிந்து தவந்தானமுபகாரந்தருமஞ்செய்து, கொண்டபொருள்விலைவாசிகாமணிதேடிக்கோடிகோடிகொடுப்பதல்லால், வண்டருமாயொன்று பத்துவிலைகூறியநியாயவட்டிவாங்கிக், கண்டவர்தங்கடுந்தேட்டுக்கண்ணை யறக்கெடுக்குமிதுகருமந்தானே ௨௮

நட்டுமாங்கனி வாழைக்கனி பலவின்கனிகளுங்காரமாகும், சிட்டருமவ்வணந் தேடும்பொருளையெலாமிருப்பவர்க்குச்செலுத்திவாழ்வர் மட்டிலவுஞ்சடையாரோதண்டலைநீ ணெறியாரேவருடந்தோறும், எட்டிமரம்பழுத்தாலுமீயாதார் வாழ்ந்தாலுமென்னதானே ௨௯

இதுகருமமிதனாலே யிதைமுடிப்பாயெனத்தொழிலை யெண்ணிச் செய்தால், அதுகருமம்பாராமற்றிருடியுமள்ளியும் புரட்டாபலைவதெல்லாம், மதியணியுந்தண்டலையார்வளநாட்டினீராடுமோதர்தங்கள், முதுகினைத்தேயெனச்சொன்னான் முலைமீதுங்கையைவிட்ட முறைமைதானே

கொச்சையில்பாலதிகமுண்டோ கூத்திமாரிடத்தினல்லகுணந்தானுண்டோ, துர்ச்சனருக்கறிவுமுண்டோ துச்சரெங்கேபோனாலுந்துணையாவாரோ, நச்சரவத்தொடையாதேதண்டலையாரோ யிந்நாடல்லாமல், அச்சியிலேபோனாலு மகப்பையனாக்காசதன்மேலார்கொள்வாரோ ௩௰

மையிலேதோய்ந்தவிழி வஞ்சியரைச்சேர்ந்தவர்கள் வறுமையுண்டாய், மெய்யிலேபிணியுமுண்டாய்க்கைப்பொருளுங்கேடாகிவிழலராவர்செய்யிலேயனந்தழைக்குந்தண்டலையார்வளநாட்டிற்றெளிந்தநல்லோர், கையிலேபுண்ணிருக்கக்கண்ணாடிபார்ப்பதென்ன கருமந்தானே

சித்தமெழுநூறு நன்றிசெய்தாலுமொருதீதுநேரேசெய்தால், அத்தனையுந்தீதென்றே யழித்திடுவர்கயவரவரையாற்றலாமே, வித்தகஞ்சோடறைமுழங்குந்தண்டலையார்வளநாட்டில்வெண்ணீறிட்டு, எத்தனைசெய்தாலுமென்னபித்தளைக்குத்தன்னாற்றமியற்கைதானே ௩௩

உள்ளவரைக்கெடுத்தோருமுதவியற்றுவாழ்ந்தோருமுறைபொய்த்தோருந், தள்ளிவழக்குரைத்தோருஞ்சற்குருவைப்பழித்தோருஞ் சாய்ந்துபோவார்பள்ளவயற்றண்டலையார்பதம்பரவிப்பணிந்தவரும்பாடினோரும்பிள்ளைகளைப்பெற்றோரும்பிச்சையிட்டநல்லோரும்பெருகுவாரே

சொன்னத்தைச்சொல்லு மிளங்கிள்ளையைப்போற்றலையார் தொண்டுபண்ணி, இன்னத்துக்கின்னதென்று பகுத்தறிவொன்றில்லாதவீணரெல்லாந் தங்கனைத்துக்கண்டவுடன்முறைபேசிக்காணமற்காடைபேசிமுன்னுக்கொன்றாய்நடந்துபின்னுக்கொன்றாய்நடந்து முடிவர்தாமே

பார்க்குளறிவிருந்தாலும்படித்தாலுங்கேட்டாலும்பணிந்துவேத, மார்க்கமுடனடந்தாலுஞ்சிறியவர்க்குப்பெரியவர்தம் மகிமையுண்டோ, ஆர்க்குமருங் கதியுதவுந்தண்டலையாரே சொன்னேனுகாயத்தில், ஊர்க்குருவிதானுயரப்பறந்தாலும்பருந்தாகாதுண்மையே ௫௬

பாரறியநாமறியப்புலவரொன்பார்கல்வியிலிற் பயிற்சியில்லார், சீரறியார்தலையறியார்சிவிகையேறுவர்புலமைசெலுத்திக்கொள்வார், ஆரணியுந்தண்டலைநீணெறியாரேயிலக்கணநூலறியாரேனும்' காரிகையாகிலுங்கற்றுக்கவிசொல்வார்பேரிசொட்டக்கடவர்தாமே ()

கொடியருக்குநல்லபுத்திசொன்னாலும்வாராதுகொடையிலாத, மடையருக்குமதுரகவியுரைத்தாலுமவர்கொடுக்கமாட்டார்கண்டீர், படியளக்குந்தண்டலைநீணெறியாரேநன்றாகப்பலருங்காண,விடியுமட்டுமழைபெயினுமதிலோட்டங்கிச்சின்முளைவீசிடாதே

கோடாமற்பெரியவர் போனடப்பதெல்லாங் குற்றமில்லைகுறைசெய்தாரோ, ஆடாகிக கிடந்தவிடந்தனின் மயிருங்கிடவாமலழிந்துபோவார்'வீடாநற்கதியுதவுந்தண்டலையாரேசொன்னேன் மெய்யோபொய்யோ, கோடாலிக்காம்புகெடுங்குலத்தினுக்கே கேடானகொள்கைபோன்றே

சிறுபிறைதோன்றிய சடையார்க்குதண்டலையார் பொன்னிவளஞ்செழித்தநாட்டில், குறையகலும்பெருவாழ்வுமைந்தருமக்களும்பொயுளாகக்குறித்திடாமல், மறைபயிலும்பத்ரகிரிபட்டணத்துப்பிள்ளையுஞ்சேர்மகிமையாலே, துறவறமேபெரிதாகுந்துறவுக்குவேந்தனொருதுரும்புதானே ௬௰

பேரிணுக்குஞ்சுற்றமுடன் மைந்தருமற்றபேருஞ்சூழ' பாரிடத்திலிருந்தாலுந்திருநீற்றுக்கழற்கொடிபோற்பற்றில்லாமல், சீரிசைக்குந்தண்டலையாரஞ்செழுத்தைநினைத்துமுத்திசேரவேண்டும், ஆரியக்கூத்தாடுகினுங்காரியமேகண்ணாவதறிவுதானே ௬௧

இரந்தனையித்தனைநாளும்பிறந்தனைநானென்றலைந்தாயினிமேலேனும், கரந்தமதிசடையணியுந்தண்டலைநீணெறியரோகாப்பா ரொன்னும். உரந்த வைத்திருந்தபடியிருந்திடினுன்றனக்கெல்லா முண்டாமுண்மை மரந்தனைவைத்தவர்நாளும்வாடாமற்றண்ணீருவார்ப்பர்தாமே

நேற்றுள்ளாநின்றிருக்கை நிச்சயமோவாதலினுனினைத்தபோதே ஊற்றுள்ள பொருளுதவியறந்தேடிவைப்பதறிவுடைமையன்றோ கூற்றுள்ளமலையவருந்தண்டலையாரேசொன்னேன்குடபால் வீசுங்காற்றுள்ளபோதெவருந்தூற்றிக்கொள்வதுநல்லகருமந்தானே ௬௩

ஓதரியவித்தைவந்தா லுரியசபைக்கழகாகு முலகிலார்க்கும், ஈத
லுடனறிவுவந்தாலிசைய குணங்களுக்கழகாயிருக்குமன்றோ,நீதிபெறுந்
தண்டலையார் திருநீறுமெய்க்கழகாநிறைந்துதோன்றும், காதினுக்கே
கடுக்கனிட்டால்முகத்தினுக்கே யழகாகக்காணுந்தானே ௪௪

அருணமிகுத்தவாகமநூல்படித்தறியார்கேள்வியொன்றுமறியார்
பின்னும், இருவினையின்பயனறியார் குருக்களென்றே யுபதேசமெவர்
க்குஞ்செய்வார், வரமிகுத்ததண்டலைநீணெறியாரேயவகிரியை மார்க்க
மெல்லாம், குருடனுக்குக்குருடன்கோல் கொடுத்துவழிகாட்டிவருங்
கொள்கைதானே ௪௫

சீருலவுந்தண்டலையார் திருவருளாலகவிலைகள் செழித்தநாட்டில்
பாரியெனவாயிரம்பொன் கனதானங் கொடுத்துவரும் பயனைப்பார்க்கி
ல்நேரிடும்பஞ்சந்தனிலேயெவ்வளவாகிலுங்கொடுத்தனீதியாகும்மாரிப
தின்கலநீரிற் கோடைதனிலொருகுடநீர் வண்மைதானே ௪௬

பிறக்கும்போதொருபொருளுங் கொண்டுவந்ததில்லை யுயிர்பிரிந்
துவேறாய், இறக்கும்போதினுங்கொண்டுபோவதில்லையென்று சும்மா
யிருந்துவிடேல், சிறக்குந்தாயினுமருள்வார் தண்டலையார் சேருமிந்தத்
தேசமெல்லாம் பழக்குங்காக்காயிருக்குங் கொம்பறியாதென்னுமொழி
ப்பயன்பாரீரோ ௪௭

வைதிடினும்வாழ்ந்திடினுமின்பதுன்பம் வந்திடினும்வம்புகோடி,
செய்திடினுந்தண்டலையார் செயலென்றே தெளிவதல்லாற் செயல்வே
றுண்டோ, மெய்தவிரவவர்செய்தா ரிவர்செய்தாரென வீணில்வெறுக்
கலாமோ, வெய்தவர்தம்மருகிருக்க வம்பைநொந்தாற் கருமமென்ன வி
யம்புவீரே ௪௮

சுற்றமாநெருங்கியுள்ளோர் தனைபறிந்தார் கற்றுணர்ந்தோர் துணை
வேறில்லோர், உற்றவேதியர்பெரியோர்க்குதவியின்றிப் பிறர்க்கருளுமு
தவியெல்லாம், சுற்றுநான்மறைபரவுந்தண்டலையாரே சொன்னேன்சும
ந்துநொந்து, பெற்றதாய்ப்பசித்திருக்கப் பிராமணபோசனநடத்தும்
பெருமைதானே ௪௯

வல்லமையான்முடிவதுண்டோ தலைக்கீழாய்நின்றாலும் வருவதுண்
டோ, அல்லதுதானவன்செயலேயல்லாமற் றன்செயலாவதுண்டோ
புல்லறிவான்மயங்காமற் றண்டலையாரடிபணிந்துபுத்தியுண்டாய் இல்
லது வாராதுநமக்குள்ளதுபோகாதெனவேயிருக்கலாமே ௫௰

நாற்கவியும்புகழ்ந்தேத்துந் தண்டலையார் வளநாட்டினல்லநீதி,
மார்க்கமுடனடந்துசெங்கோல் வழுவாமற்புவியாண்டு வண்மைசெய்பு

ம், தீர்க்கமுள்ளமன்னவனைத் தெய்வமென்பார்கொடுங்கோன்மைசெ லுத்திவிற்கும், மூர்க்கமுள்ளமன்னனும் தன்மந்திரிமூடராகில் மூழ்கு வாரே ௫௧

நன்றிதரும்பிள்ளையொன்று பெற்றாலுங்குலமுழுது நன்மையு ண்டாம், அன்றியறிவில்லாதபிள்ளையொருநூறுபெற்றுமாவதுண்டோ மன்றிடைம்புரிவாரே தண்டலையாரேசொன்னேன் வருடந்தோறும், பன்றிபலவீன்றுமென்ன குஞ்சரமொன்றீன்றதனால் பலனுண்டாகுமே

உழையிட்டவிழிமடவாருறவுவிட்டு மிகவாழுமுலகவாழ்க்கைப் பிழையிட்டேயின்னமென்றனுசை விடாதலக்கழியப்பெற்றேனந்தோ; தழையிட்டகொன்றைபுனை தண்டலையாரே யெனதுதன்மையெல்லா ம், மழைவிட்டுந் தூவானம்விட்டதில்லையாயிருந்தவண்மைதானே ௫௩

துன்மார்க்கர்க்காயிரந்தான் சொன்னாலுமறந்துவிட்டுத் தடுக்கே செய்வார், சன்மார்க்கர்க்கொருவார்த்தைசொலிற் கழுகிற்பட்டசெழு ந்தழும்பாகக்கொள்வார், பன்மார்க்கமறைபணியுந் தண்டலையாரேசொ ன்னேன் பழமையான, நன்மாட்டுக்கொருசூடும் நற்பெண்டிர்க்கொரு வார்த்தை நடக்கையாமே ௫௪

கரப்பவர்க்குநல்லகதிவருவதில்லை செங்கோலாற்கடல்சூழ்வைய ம்' புரப்பவர்க்குமுடிவிலேசொர்க்கமல்லா னரகமில்லைபொய்யில்லாம ல், உரைப்பவர்க்குநலம்புரியுந் தண்டலையாரேசொன்னேனொருமையா க' இரப்பவர்க்குவெண்சோறுபஞ்சமுண்டோ வொருக்காலுமில்லைதா னே ௫௫

படுங்கோலமடையாமற் றண்டலையார் திருப்பணிக்குப்பங்கஞ் செய்வார், நெடுங்கோலுந்தண்டமுமா வீணனவீணனைம்போனீதிசெ ய்வார் கெடுங்காலமல்லாமல் விளைவுண்டோ மழையுண்டோகேள்வியு ண்டோ, கொடுங்கோன்மன்னவர்நாட்டிற் கடும்புலிவாழுங்காடுகுண மென்பாரே ௫௬

விற்பனற்குவாழ்வுவந்தான் மிகவணங்கிக்கண்ணோட்டமேலுஞ் செய்வார், சொற்பருக்குவாழ்வுவந்தால் கண்டெரியாதிறுமாந்துதுன்ப ஞ்செய்வார், பற்பலர்க்குவாழ்வு ருக் தண்டலைநீணெறியாரே பண்பில் லாத, அற்பருக்குவாழ்வுவந்தா லர்த்தராத்திரிகுடைமேலாகுந் தானே

விசயமிகுந் தண்டலைநீணெறியாரே யொருத்தர்சொல்லை மெய் யென்றெண்ணி' வசைபெருகவகியாயஞ்செய்து பிறர்பொருளையெல் லாம் வலிதின்வாங்கிதிசையறியுங் கீர்த்திபெறத்தர்மமென்றுஞ்செய்வ தெல்லாம் தீதேயாகும், பகவினையேவதைசெய்து செருப்பினைத்தான ங்கொடுக்கும் பான்மைதானே ௫௮

கற்றவர்க்குக்கோட்டமில்லை கடந்தவர்க்குசாதியில்லை கருணைகூர்ந்த கற்றவர்க்குவிருப்பமில்லை நல்லவருக்கொருகாலுமாகமில்லை, கொற்றவ

ருக்கடிமையில்லை தண்டலையார்மலர்பாதங்கும்பிட்டேத்தப், பெற்றவருக்கற்பமில்லைபிச்சைச்சோற்றனுக்கில்லை பிறப்புதானே ௫௯

பிரசமுண்டுவரிபாடுந் தண்டலையார் வளநாட்டிற்பெண்களோடு' சரசமுண்டுபோகமுண்டு சங்கீதமுண்டு சுகந்தானுமுண்டு, உரைசெறிந்தவறுமையுண்டாம் விடுக்கணுண்டாமொன்றுமில்லை யுலகோர்க்கெல்லாம், அரிசியுண்டேல்வரிசையுண்டா மக்களுண்டாகில்மச்சானன்புண்டாமே ௬௰

தத்தைமொழியுமைபாகர்தண்டலையார் பொன்னிவளந்தழைத்தநாட்டில், வித்தகமந்திரியில்லாதவாசலிலே நீதியில்லைவேந்தர்க்கெல்லாம், புத்திநெறிநீதிசொல்லுமந்திரியில்லாதொருவர் போதிப்பாரோ, நித்தியமுநீர்மோருங்கறிபூசணிக்காயுநிகழ்த்தென்றானே ௬௧

நேசமுடன்சபையில்வந்தால் வேளையறிந்திங்கிதமாய் நிருபர்முன்னே' பேசுவதேயுசிதமல்லானடுவிலே போய்க்குளறிப்பேசனல்ல' வாசமிகுந்தண்டலைநீணெறியாரே பிடகமதுநீராடிப், பூசைபண்ணும்வேளையிலே கரடியைவிட்டோட்டுவதுபோலுந்தானே ௬௨

மண்ணுலகிற்பிறர்குடியைவஞ்சனையாற் கெடுப்பதற்கு மனத்தினாலே, உன்னிடினுமவன்றானே கெடுவனென்பதுண்மையன்றோ தென்னனுஞ் சேரனும்பணியுந்தண்டலைநீ ணெறியாரேசெவ்வைபார்க்கில் தன்வினைதன்னைச்சுட வோட்டப்பம்வீட்டைச்சுடவுந்தான் கண்டோமே ௬௩

முன்பெரியோர்தொன்றுதொட்டு நடந்தவழி தமைப்பழித்து முரண்டுபேசிப், பின்புபலருடன்கூடி நூதனமாய்த்தானடக்கும் பெருமைகாணில், துன்புரியார்க்கருள்புரியுந்தண்டலைநீ ணெறியாரே தூயளான, அன்புளதாயைப்பழித்துமக ளாவிசாரிபோனவறிவுதானே ௬௪

அந்தணர்க்குத்துணைவேதமரசருக்குத் துணைவயவாளவனிமீதில், மைந்தருக்குத்துணைதாயார் தூதருக்குத்துணைமதுரவார்த்தையன்றோ நந்தமக்குத்துணையான தண்டலைநீணெறியாரே நன்பரான, சுந்தரர்க்குத்துணைநாளுமேழையர்க்குத் தெய்வமேதுணையென்பாரே ௬௫

போரஞ்சானதிவீரன் பொருளஞ்சான்விதரணஞ்சேர் புருடனென்பான்' நீரஞ்சான்மறைமுனிவ னெருப்பஞ்சாள்கற்புடைய நெறிசேர்மின்னாள், வாரஞ்சாவிளமுலைசேர்தண்டிலைநீ ணெறியாரேமதமாவென்னும் காரஞ்சாதிளஞ்சிங்கங்கனத்தவலியுளதூதன் கண்ணஞ்சானே

உபகாரஞ்செய்பவர்க்குக் குறிப்பறிந்துசெயும்வரிசையோநில்லாது, அபகாரஞ்செய்பவருக்கடித்தாலும் வைத்தாலும்மதுநில்லாது சுப

மாகுந்தண்டலையார் வளநாட்டிற்றிருடனுக்குத்தொழிலில்லாது, விப
சாரஞ்செய்பவர்க்குப்புத்திகளென்சொன்னாலும் விட்டிடாரோ ௬௭

சகமுற்றதண்டலையாரடிபோற்றி மகராசர்சபைவந்தால் சுகமுற்றவேசியர்க்குப்பொன்னூறுகொடுப்பர்தமிழ் சொன்னபேர்க்கு அகமுற்றசோறிடுவாரந்தணர்க்கெல்லா நாழிபரிசியீவார் பகடிக்கோபணம்பத்துத் திருப்பாட்டுக்கொருகாசுபலிப்பாரே ௬௮

தேரோடுமணிவீதித் தண்டலையார் வரங்காணுந்தேசமெல்லாம் பேரோடும்புகழ்படைத்த வீராதிவீரனெனும்பெரியோனேனும், நேரோடுமுலகத்தோடொன்றுபட்டு நடப்பதுவேநீதியாகும் ஊரோடவுடனோடி நாடோடநடுவோடலுறுதிதானே ௬௯

சீரிலங்குந்தண்டலையா வளநாட்டிலொருதோழன்றீமைதீர, வார மிகும்பிள்ளைதனையரிந்துண்டானொருதோழன் மணமாய்க்கொண்ட, ஆரமிகுமனைக்கிழத்தி யாண்டிச்சி வடிவுகொண்டாளாதலாலே ஊரிலொருவனே தோழனாருமற்றேதார முண்மைதானே ௭௰

எத்தர்களுமுலுத்தர்களு மூடர்களுமீனர்களுமிரக்கமில்லை பத்தர்களுங்கொடிதானலோபகுணமேகுணமாவாழ்ந்திருப்பார், பத்தர்கண்ணலமடையுந் தண்டலையாரேயறிவோர்பழிப்பரேனும் பித்தர்களுந் தங்குணமே நூலினுஞ்செவ்வையதாகப்பேசுவாரே ௭௧

இழைபொருந்த முலையுமைசேர்தண்டலையார் வளநாட்டிலெடுத்தராகம் தழதழத்துப்பாடுவதில்மவுனமாயிருப்பதுவே தக்கதாகும் குழகுழத்தகல்வியினுங்கல்லாமலிருப்பதுவே குணமெந்நாளும் வழவழத்தவுறவதிலும்வயிரம்பற்றியபகையேவண்மையாமே ௭௨

அருட்பயிலுந்தண்டலையாரடியவர்களெக்குலத்தோராணுமென்ன பொருட்பயிலுந்திருநீறுஞ்சந்தனமுங்கண்டவுடன் புகழ்ந்துபோற்றி இருபதுவேமுறைமையல்லாலேழ்மையுஞ் சாதியுமிகழ்ப்பேச நெருப்பினையே சிறிதென்றுமுன்றானைதனின்முடியநினைந்தவாறே ௭௩

கானமருங்கவரியொரு மயிர்படினுமிறக்குமது கழுதைக்குண்டோ மானமுடன்வாழ்பவனே மாபுருடன்சுயோதனனைமதிப்பாருண்டோ ஆனகஞ்சேரொலிமுழங்குந் தண்டலையாரே சொன்னேனரைக் காசுக்காகப் போனவபிமானமோராயிரம் பொன்கொடுத்தாலும்பொருந்திடாதே ௭௪

தனிமேவுபுற்றடிமண்குருந்தடி மண்ணுமகுடந்தன்னிலார்மண் ணமேவு மணியுடனேமந்திரமுமாகி நல்லமருந்துமாகி இனமேவுந்

தண்டலையார்தொண்டருக்குவந்தபிணியெல்லாந்தீர்த்தல். அனுபோகந்தொலைந்தவுடனற்பவிழ்தமும்பலிப்பதாகுந்தானே ௭௫

கைக்கெட்டாதொருபொருளுங்கண்டவர்க்குநகையாகுங் கனமேயில்லை, இக்கட்டாய்வருவதல்லாற்செல்வமுண்டோகவலுறுகையாலெடுக்கலாமோ, திக்கெட்டெறிய கீர்த்தித்தண்டலையார் வளநாட்டிற்சிசியென்றுசொக்கட்டானுடுதற்குச்சொக்கட்டான்பொல்லாத சூதுதானே

உரங்காணும்பெண்ணாசைகொடிதாகும்பெண்புத்தி யுதவாதாகுந்திரங்காணும்பெண்வார்த்தைதீதாகும்பெண்சனனஞ்சென்னமாமோ வாங்காணுந்தண்டலைநீ ணெறியாரேபெண்ணிடத்தின் மயக்கத்தாலே, இரங்காதபேருமுண்டோபெண்ணென்றாற்பேயுமன மிரங்குந்தானே

துப்பிட்டவாலம்விரைசிறிதெனினும் பெரிதாகுந்தோற்றம்போலச், செப்பிட்டதினையளவுசெய்நன்றிபனையளவாய்ச்.சிறந்தேதோன்றும்-கொப்பிட்டவுமைபாகர்தண்டலையார் வளநாட்டிற்கொஞ்சமேனும், உப்பிட்டபேர்களையுமுள்ளமட்டுநினைப்பதுவேயுறுதிதானே ௭௮

கொச்சையர்பிள்ளைக்கு தவுந்தண்டலையார்வளநாட்டிற்கொடிதாய்வந்த, வச்சிரப்பிள்ளைக்குமுன்னமாதவனேபுத்திசொன்னான்வகையுஞ்சொன்னான் அச்சுதப்பிள்ளைக்குமுன்னேயாண்டவனேபுத்திசொன்னதலாலே அர்ச்சனப்பிள்ளைக்கூரார்புத்திசொல்லுவாரெனவுஞ்சொல்லுவாரே ௭௯

முன்னரியமறைவணங்குந்தண்டலையாராகமத்தின் மொழிகேளாமல்' பின்னமுறவோருயிரைக்கொன்றவனும் விற்றவனும்பெற்றுளோனும், அன்னமொடக்கறிசமைத்தேயுண்டவனுநரகுறுவராதலாலே-தன்னுயிர்போலெந்நாளுமன்னுயிருக்கிரங்குவதேதக்கதாமே ௮௰

கைசொல்லும் பனைகாட்டுங்களிற்றுரியார் தண்டலையைக்காணார். போலப்பொய்சொல்லும்வாயினர்க்குப்போசன முங்கிடையாதுபொருளில்லாதுமைசொல்லுங்காளிசூழ்தாழைமலர்பொய்சொல்லிவாழ்ந்ததுண்டோமெய்சொல்லிவாழாதார்பொய்சொல்லிவாழ்வதில்லைமெய்யதாமே ௮௧

தாயறிவாள்மகளருமைதண்டலைநீணெறியீசர்தாமேதந்தைதானறிவாரோமதருமைபரவையிடைதூதுசென்றநறிகிலீரோ, பேயறிவாமுழுமூடர்தமிழருமையறியாதபேற்றிபேசில்-நாயறியாதொருசந்திச்சட்டிப்பானையினையென்னுஞாயந்தானே ௮௨

பேருணாகண்டறியாதுகலைச்சுமையோடுகள் சுமந்துபிதற்றுவோனும், போரிடைந்தறியாதுபதினெட்டாயுதஞ்சுமந்தபுல்லியோனும்,ஆ

ரணிதண்டலைநாதரகமகிழாப்பொருள்சுமந்தவறிவிலோனும், காரியமொன்றறியார்க்குக்குங்குமஞ்சுமந்தகழுதைநிகரொப்பா வர்தாமே ௮௩

பன்னகவேணிப்பரமர்தண்டலையார்வளநாட்டிற்பலருங்கேளீர், தன்னறிவுதன்மகிமைதன்மரபுக்கேற்றநடைதகுமேயல்லால் சின்னவர்கள்பெரியகணஞ்செயநடந்தாலுள்ளதும்போய்ச்சிறியகாகம், அன்னநடைநடக்கப்போய்த்தன்னடையுங்கெட்டவகையாகுந்தானே ௮௪

பொறையுடனேயறிவுடையாரடங்கி நடந்தேயெவரும்புகழவாழ்வார், கெறுவமுடனகந்தையுள்ளாரிறுமாந்துநடந்துநிலைகீழாவீழ்வார், மறுமையினுமிம்மையினுங்காணவருந்தண்டலையார் வாழுநாட்டில். நிறைகுடமேதளும்பாதுகுறைகுடமேகூத்தாடிநிற்குந்தானே ௮௫

கற்பூரவல்லியொருபாகர்செழுந்தண்டலையார்கடலேழ்சூழ்ந்த, நற்பூமிதனிற்பிறந்தோரெல்லாருமக்களெனநாட்டலாமோ, அற்பூரும்பண்புடையார் நற்குணமும்பண்பிலாரழகுங்காணில்' பொற்பூவின்வாசனையும்புன்முருக்கம்பூவுமெனப்புகலலாமே ௮௬

ஞாலமுறுநல்லவர்க்குச்செல்வம்வந்தாலெல்லோருநாடியந்தக்காலமிரிந்தேவினைவேரெவ்வகைவந்தடுப்பரெனக்கருத்திலுன்னி, மால்பணிபுந்தண்டலையார் வளநாட்டில்வாழ்பவரேமலைக்கவேண்டாம், ஆலமரம்பழுத்தவுடன்பறவையின்பால்சீட்டெவர்களனுப்பினாரே ௮௭

சேணிலகுமதிச்சடையார் தண்டலையார்வளநாட்டிற்சிறந்தபூணிநற், காணவருநாணுடையாரல்லாதார்கருமமெல்லாங்கருதிப்பார்க்கில் ஆணவலம்பெண்ணவலமாடியகூத்தவலமெனவலைந்துகெட்ட நாணமிலாக்கூத்தியர்க்குநாலுதிக்கும்வாயிலெனநாட்டலாமே ௮௮

அடுத்தகமனைதோறுந்திரிவாள்கணவனுக்குமுன்னுண்பாளடக்கமில்லாள்கடுத்தமொழிபேசிடுவாள்சிறுநனந்தேடுவளிவளைக்கலந்துவாழ்தல்எடுத்தவிடைக்கொடியாரேதண்டலையார் யெவர்க்குமின்பமாகக்குடிதனமேசெயவேண்டிப்பிடாரிதனைப்பெண்டுவைத்துக்கொண்டதாமே

மண்ணுலகாளவுநினைப்பார்பிறர்பொருண்மேலாசைவைப்பார்வஞ்சஞ்செய்வார், புண்ணியமென்பதுசெய்யார்கடைமுறையிலலைந்துழிந்துபுரண்டுபோவார், பண்ணுமிலக்கணமொழியார்தண்டலையார்வகுத்தவிதிப்படியல்லாமல், எண்ணமெல்லாம்பொய்யாகியேபளிதமே மெய்யாகவிருக்குந்தானே ௯௰

பரியாமவிடுஞ்சோறுமுமைகண்டகனவுமென்றும் பரிசிதற்கு, அரிதானசெந்தமிழிற்கருள்சிறிதுமில்லாதானறிவுமேதாம், கரிகாலம்பூசை

புரிதண்டலைநீணெறியாரோகதித்தவோசை,தெரியாதசெவிடன்காதினிற்சங்குகுறித்ததெனச்செப்பலாமே ௯௧

கலைசேருமதிகவிகாரணமுகத்துறைகளுடனேசமாகிப் பலநாளும் வரையடுத்தவர்க்குப்பலமல்லாற்பயமுமுண்டோ,கலைசேருந்திங்களணிதண்டலையாரேசொன்னேன்கண்ணிற்காணமலைமீதிலிருப்பவரைவந்துபன்றிபாய்வதுண்டோவகுத்திடீரே. ௯௨

பணந்தானேயறிவாகும்பணந்தானே வித்தையுமாம்பரிந்துதேடும் பணந்தானேமணமாகும்பண மில்லாதவர்பிணத்தின் பான்மையன்றேபணந்தானேபேசுவிக்குந்தண்டலைநீணெறியாரேபாரின்மீதுப்பணந்தானேகுணமாகும்பசிதானேகறியாகும்பார்த்திடீரே ௯௩

உருவெடுத்தநாணமுதலாவொருசாண்வயிற் வளர்க்கவுழல்வதல்லால்மருவிருக்குநின்பாதமலர்தேடித்தினம்பணியமாட்டேனந்தோ திருவிருக்குமணிமாடத் தண்டலையாரேயெனதுசெய்கையெல்லாம் சருசரிக்கநோமனறித்திக்காயநேரமில்லாத்தன்மைத்தானே ௯௪

மானென்றவடிவெடுத்துமாரீசன்பேய்மடிந்தான்மானைவேண்டித்தேடென்றமொழிச்சீதைசிறையிருந்தாள்சீதைதனைத்திருடிச்சென்றேவானென்றுமாசிழந்தா னிராவணனுந்தண்டலையார்மகிமையன்றோதானென்றுநினைக்கிரதைத்தெய்வமொன்றுநினைப்பதுவுஞ்சரசந்தானே

ஆண்பிள்ளாயெனக்கொடுக்கும் பெரியவரையடுத்தவனிவ்வவனியோரில் நாண்பிள்ளாயதிகனென்றேநண்ணலருமேவல்செய்நாளும் வாழதல் வான்பிள்ளைப்பிறைசூடுந்தண்டலையார்பூஷணமாய்மருவுநாகம் என்பிள்ளாய்கருடாநீசுகமோவென்றுரைத்தவிதமென்னலாமே

மற்றவரார்தமிழ்க்குற்றநாட்டவல்லார்நக்கீரன்வலியனுகி வெற்றிபுனைமீனாட்சிசுந்தரநாயகரடுத்துவிளம்பும்போது பற்றுளதண்டலைவாழுங்கடவுளென்றும்பாராமற்பயப்படாமல் நெற்றிவிழிகாட்டு கினுங்குற்றங்குற்றமேயென்றேநிறுத்தினனே ௯௭

முக்கணர்தண்டலைநாட்டிற்கற்புடையோர் பெருமைமொழிந்திடிலொருத்தி ஒக்குமெரிகுளிரவைத்தாளொருத்திவில்வேடனையெரித்தாளொருத்திமூவர் பக்கமுறவமுதளித்தாளொருத்தியேழுபொரிநடத்தும்பான்மைபோலக் கொக்கெனவேயிருந்தனையோ கொங்கணவாவென்றொருத்திகூறினளே ௯௮

பரங்கருணைவடிவாகுந்தண்டலையார்வளநாட்டிற்பருவஞ்சேர்ந்தங்கிதாங்குலவுகாமநூல்தனையறிந்தவதிருபத்தையலாரை வரம்பறுதாழ்டிமையுள்ளமட்டிகளுக்கேகொடுத்தல்வாய்ப்பிலாதகுரங்குதன்கையினிற்பூமாலைதனையேகொடுத்தகொள்கைதானே ௯௯

சோறென்னசெய்யுமென்றுகுறித்திடிலோகவல்லவருள் சுபந்துகாக்கும் சோறென்னசெய்யுமெல்லாமழி திடவேசெய்யுமதனசொரூபமுண்டாம்சோறென்னவெளிதனவோ தணடலையார்மகபூசைதுலங்கச்செய்யும்சோறென்னசெய்யுமென்றால் சொன்னவணஞ்செயும்மன்னுந்துலங்குந்தானே ௰

செழுங்கள்ளினிறைசோலைத்தணடலையார் திருப்பணிக்குடிருடிக்கொணடோ எழுங்கள்ளர்நல்லகள்ளர்பொல்லாதகள்ளர்வரெவரோவென்னில்தொழுங்கள்ளருடனேகும்பிடுங்கள்ளர் திருநீறுகுழைக்குங்கள்ளர் அழுங்கள்ளர்தொழுங்கள்ளராசாரக்கள்ளரிவரைவர்தாமே

தனத்திலேமிகுந்தசெழுந்தணடலையார் பொன்னிவளந் தழைத்தநாட்டல் இனத்திலேமிகும்பெரியோரியாவருக்குமனமொன்றவெல்லாஞ்செய்வார்சினத்திலேமிகுஞ்சிறியோர்காரியமேசொல்வதொன்றுசெய்வதொன்று மனத்திலேபகைவாகியுதட்டிலேயுறவாகவாழ்வார்தாமே

காலனைவெல்தணடலையார் வளநாட்டிற்களவுசெய்வோர்தம்மைச்சேரில் சாலவருங்குருநிந்தையுடன்கேடுபஞ்சபாதகமீதென்று சிலமுடையோரணுகார்பனையடியிலேயிருந்து தெரியவாவின்பாலினையே குடித்தாலுங்கள்ளென்பரொனுஞ்சொல்லைப்பயந்துதானே ௰௩

கலியாமற்றணடலையிற்றாயகனாருள்கொணடுதருமஞ்செய்பப்பொலிவாகிக்கொழுமீதிவந்த பொருளீந்தவை தாம்போகமீர்தால் மலிவாகிச்செல்வமுணடாம்வயன்முழுதும்விளைந்திடுகன்மாரியாகும் கலியாணப்பஞ்சமில்லைகளப்பஞ்சமில்லையொருக்காலுந்தானே ௰௪

இரக்கத்தாலுலகாளுந்தண்டலையாரேசிவனேயெந்நாளும் இரக்கத்தான்புறப்பட்டவொன்றனையுமிரக்கவைத்தீரிதனுலென்ன இரக்கததானதிபாவமிரப்பதுதீதென்றாலுமின்மையாலே இரக்கப்போனதுமவர்சிறக்கப்போவதுகருமந்தானே ௰௫

ஆழியெல்லாம்வயலாகியவனியெல்லாமன்னமயயானுலென்னகுழவந்தேயிரப்பவர்க்குப்பசிதீரவுணடிருக்குஞ்சுகந்தானுணடோ ஏழுலகும்பணியவருந்தணடலையாரேசொன்னேனெந்நாளும்நாழிநெல்லுக்கொருபுடைவைவிற்றாலுநிருவாணம்நாய்க்குததானே ௰௬

பழமொழிவிளக்கம் - முற்றிற்று.